

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2052 | நவம்பர் 04, 2021 | புரட்சி 20 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00

## ‘ஜூலை 18 – நவம்பர் 1’ முரண்பாடுகள் இல்லை!

# தமிழர் ஒற்றுமைக்கான குறியீடுகளை முன்னெடுப்பதே நோக்கம்

### சிறப்புத் தலையங்கம்

பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு - மொழி வழி மாநிலங்கள் பிரிந்த நாளான நவம்பர் முதல் தேதியை ‘தமிழ்நாடு’ நாளாக பின்பற்ற வேண்டும் என்று முடிவு ஏற்கனவே செய்து, அந்த நாளில் தமிழ் நாட்டுக்கான கொடி ஒன்றை ஏற்ற கடந்த ஆண்டு முடிவு செய்தது. எடப்பாடி பழனிச்சாமி தலைமை யிலான ஆட்சி, நவம்பர் 1ஆம் தேதி தமிழ்நாடு நாளாக அறிவித்தது. விழா நடத்தியது. ஆனாலும், பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பின் அமைப்பாளர் பொழிலன் உள்ளிட்ட தோழர்களைக் கைது செய்தது எடப்பாடி. பழனிச்சாமி ஆட்சி. இந்த ஆண்டு இதே போன்று நவம்பர் முதல் நாளை ‘தமிழ்நாடு’ நாளாகக் கொண்டாட பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு முடிவு செய்தது. தமிழக முதல்வரிடம் நேரில் கோரிக்கை மனு ஒன்றையும் அளித்தது.

இந்த நிலையில் நவம்பர் 1, மொழி வழி மாநிலம் பிரிந்தபோது தமிழ்நாட்டுக்கு ‘சென்னை மாகாணம்’ என்கிற பெயர் இருந்தது. பெரியார் தமிழ் நாடு என்று பெயர் சூட்டப்பட வேண்டும் என்பதில் மிக உறுதியாக இருந்து அது தொடர்பாக பல அறிக்கைகளில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். தி.மு.க. 1957ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் தி.மு.க. எதிர்கட்சியாக இருந்தபோது, தமிழ்நாடு பெயர் சூட்டும் தீர்மானத்தைக் கொண்டு வந்தபோது, காங்கிரஸ் ஆட்சி அதை ஏற்க மறுத்தது. தொடர்ந்து 61, 62, 64ஆம் ஆண்டுகளிலும் தி.மு.க. கொண்டு வந்த தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. 1967இல் தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு, 1968 ஜூலை 18ஆம் நாள், முதல்வர் அண்ணா, ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டும் தீர்மானத்தைக் கொண்டு வந்து, சட்டசபையில் ஒரு மனதாக நிறைவேற்றச் செய்தார்.

‘சென்னை மாகாணம்’ என்ற பெயர் மாற்றி ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டப்பட்ட நாள் தான் ‘தமிழ்நாடு’ என்று தமிழக அரசு சார்பில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருக்கிறார். அதே நேரத்தில் மொழி வழி மாநிலங்கள் பிரிவினை நாளான நவம்பர் 1ஆம் தேதிக்கும் மரியாதை தரும் வகையில் எல்லை மீட்புக்காகப் போராடிய உயிருடன் இருக்கும் எல்லைக் காவலர்கள் 110 பேருக்கு ரூபாய் ஒரு இலட்சம் பொற்கிழி வழங்கப்படும் என்ற அறிவிப்பை யும் வெளியிட்டுள்ளார்.

இந்த நிலையில் தமிழக அரசு அறிவிப்புக்கு முன் பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப் பில் இடம் பெற்றுள்ள திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்கனவே கூட்டமைப்பு எடுத்த முடிவின்படி நவம்பர் முதல் நாள் விழாக் களில் இந்த ஆண்டு கலந்து கொள்கிறது. தமிழக அரசு ஜூலை 18ஆம் நாள் ‘தமிழ்நாடு நாள்’ என்று எடுத்த முடிவும், ‘நவம்பர் முதல் நாள்’ என்ற முடிவும் நோக்கத்தில் முரண்பட்டவை அல்ல. தமிழ்நாடு - தமிழர் என்ற உணர்வை தமிழர்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதே இரண்டு அறிவிப்புகளின் முதன்மையான நோக்கம். இதை முரண்பாடாக மாற்றி, தி.மு.க. அரசுக்கு எதிராக திருப்பிவிட ‘திராவிட எதிர்ப்பு’ பேசுவோர் முயற்சி செய்வதற்கு வாய்ப்பளிக்கக் கூடாது என்றே கருதுகிறோம். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், நவம்பர் முதல் நாளை ‘தமிழ்நாடு இறையாண்மை’ நாளாக அறிவித்து, கருத்தரங்கம் ஏற்பாடு செய்த நிலையில், தமிழ்நாடு அரசின் அறிவிப்பை வரவேற்று, இனி வரும் காலத்தில் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும் என்று கருத்து தெரிவித்துள்ளார். கருத்தரங்கமும் திட்டமிட்டபடி நடந்தது.

பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்பு இது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில், “அரசு அறிவிப்பு குறித்துக் கூட்டமைப்பு கலந்து பேசி நவம்பர் 1ஆம் நாள் விழாவுக்குப் பிறகு அறிவிக்கும்” என்று அறிவித்திருக்கிறது. அந்த அடிப்படையில் கூட்டமைப்பு சார்பில் கொளத்தூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ‘நவம்பர் 1 - தமிழ் நாடு விழாவில்’ பங்கேற்று, தமிழ்நாட்டுக்கான கொடியையும் ஏற்றியிருக்கிறார். “தமிழ்நாடு அரசின் அறிவிப்பை வரவேற்கிறேன். பெரியாரிய உணர்வாளர் கூட்டமைப்புடன் கலந்து பேசி முடிவெடுப்போம்” என்று கூறியிருக்கிறார்.

அண்ணா, தமிழ்நாடு சட்டமன்றத்தில் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை நிறைவேற்றிய நாள் ஜூலை 18, 1968. ஆனாலும் அவர் உடல் நலிவுற்றிருந்த காரணத்தால் கூட்டங்களில் பேச முடியாத நிலையில் மூன்று மாதம் கழித்து, 1.12.1968 அன்று தான் மருத்துவர் ஆலோசனையையும் மீறி வெற்றி விழா கூட்டத்தில் பேசினார்.

“இன்றைய தினம் நான் பேசுவதால், என் உடலுக்கு ஊறு நேரிடுமானால் இந்த உடலிருந்து என்ன பயன்?” என்று கேட்டுவிட்டு, தமது அரசின் மாற்றிட முடியாத முப்பெரும் சாதனைகளைக் குறிப்பிட்டார். பள்ளிகளில் இந்தியை ஒழித்தது, சுயமரியாதை திருமணச் சட்டம், தமிழ்நாடு பெயர் மாற்றம் ஆகியவற்றைக் குறிப்பிட்டார். தமிழ்நாடு அரசின் இந்தச் சட்டத்துக்கு அன்றைய ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியது.

இந்தப் பின்னணியில், 1968 டிசம்பர் 6ஆம் தேதி, பெரியார் ‘விடுதலை’யில் ஒரு தலையங்கம் தீட்டினார். “இந்தப் பிரச்சினை வெற்றி பெற்றதற்கு அண்ணா தான் காரணம். இதை வேறு கட்சியினரால் செய்து முடித்திருக்க முடியாது” என்றும் பாராட்டிய பெரியார், அத்துடன் நிறுத்திக் கொள்ளவில்லை. பெயர் மாற்றத்தைவிட நாடு விடுதலை பெறுவதுதான் முக்கியமானது என்று அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தார். “சென்னை மாகாணத்துக்கு”, ‘தமிழ்நாடு’ என்று பெயர் சூட்டுவதற்கு தொடர்ந்து வலியுறுத்திய அதே பெரியார், பெயர் மாற்றத்தோடு முடிந்து விடவில்லை; சூத்திர இழிவு ஒழிப்பு நீடிக்கவே செய்கிறது; எனவே நாட்டு விடுதலை தான் ஒரே வழி என்று அடுத்த கட்டத்துக்கு நகர்கிறார். பெரியார் இவ்வாறு எழுதினார்.

“இந்தப் பெயர் மாற்றத்துக்கு அண்ணாவின் ஆட்சி தான் காரணம். ஆனால், தமிழ் மக்களுக்கு இந்தப் பெயர் மாற்றத்தால் என்ன பயன்? இது எப்படி இருக்கிறது என்றால், நமது ஆள் எதிரியிடம் உதை வாங்காமல் தப்பித்து வந்து விட்டான் என்பது போல்தான் இருக்கிறது. ஆசாமிக்கு கண் பொட்டை தான்; என்றாலும் பெயர் கண்ணப்பன் என்பது போல் தோன்றுகிறது எனக்கு. இப்போதும் டில்லி ஆட்சி இந்தப் பெயர் மாற்றத்தை மறுத்திருந்தால் நம் கதி என்ன? இராஜினாமா செய்வோம். அது நமது பல வீனத்தைத் தானே காட்டுகிறது? எப்படியானாலும் இது மற்ற கட்சியாரால் செய்து முடித்திருக்க இயலாது என்பதை ஒத்துக் கொள்ள வேண்டியது தான். இது ‘அண்ணாத்துரை நாடு’ என்று பெயர் மாறினாலும் தமிழர்கள் அடிமை நாட்டில் அடிமையாக வாழ்வது மாற்றமடையுமா?” என்று எழுதினார்.

அதே பெரியார், 1968ஆம் ஆண்டு செப்டம்பர் 21ஆம் நாள் போரூர் தி.மு.க. நடத்திய அண்ணா பிறந்த நாள் விழாவில் பேசிய போது, **“தி.மு.க. ஆட்சி நீடித்து இருந்தாக வேண்டும். இவர்கள் சட்டத்துக் குட்பட்டே ஆட்சி செய்யட்டும். மற்ற பிரச்சினையை நாம் பார்த்துக் கொள்வோம்”** என்று பேசினார்.

இந்தப் பின்னணியில் ‘தமிழ்நாடு - தமிழினம்’ தனது ஓர்மையை உணர்த்துவதற்கான குறியீடுகளே நவம்பர் 1-ம், ஜூலை 18-ம் ஆகும். குழந்தை பிறந்த நாளா? பெயர் சூட்டிய நாளா? என்ற ‘உளம் சார் உணர்வுகளை’ சமூக - அரசியல் விடுதலை கருத்தியலோடு இணைத்துப் பார்க்க முடியாது. ஒன்றிய பா.ஜ.க.வின் ‘ஒற்றை மதவாத’ ஆட்சிக்கு எதிராகப் போரிட, ‘தமிழ்-தமிழ்நாடு’ எனும் ‘ஓர்மை’ மிக அவசியமும், அடித்தளமுமாக இருக்கிறது. சமூகநீதி மற்றும் தமிழ்நாடு வளர்ச்சிகளை முன்னெடுத்து அவற்றை விளிம்பு நிலை மக்களுக்கான அதிகாரமாக்கி, ‘ஜாதி - சூத்திர’ இழிவிலிருந்து விடுபடும் தமிழ் நாட்டை உருவாக்கும் இலட்சியத்தை நோக்கி முன்னேறிச் செல்ல நாம் பயன்படுத்தும் குறியீடுகள் இவை. இவற்றில் முரண்பாடுகளைத் தவிர்த்து, நோக்கத்தை நெறிப் படுத்துவதே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும்!

– புரட்சிப் பெரியார் முழக்கம் 04.11.2021

## அண்ணாமலையின் ‘திடீர்’ தமிழ் நாட்டுப் பற்று

அண்ணாமலை ‘வந்து விட்டார்’; ‘தமிழ்நாடு’ நாளை நவம்பர் 1ஆம் தேதி தான் கொண்டாட வேண்டும். அதுவே பிறந்த நாள், பெயர் வைத்த நாளை பிறந்த நாளாகக் கொண்டாடுவதா? என்று கேட்கிறார். தமிழ், தமிழ்நாடு உணர்ச்சி அண்ணாமலைக்குப் பீறிட்டு விட்டது போலும்!

பிறந்த நாளுக்கு நாள், நட்சத்திரம், நாழிகை பார்த்து ஜாதகம் பார்க்க வேண்டும் என்ற கட்சிக்காரர் ஆயிற்றே! அதனால் பிறந்த நாள் தான் இவர்களுக்கு முக்கியம்.

நோயுடன் சவலையாகப் பிறந்த குழந்தைக்கு உரிய சிகிச்சை அளித்து முழுமையான குழந்தையாக மாற்றிய நாளை, பிறந்த நாளாக ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டால், அதற்கு நாள், நட்சத்திரம் எப்படிப் பொருந்தும் என்று தான் இவர்கள் கேட்பார்கள். ‘சனாதனம்’ அப்படித்தான் பார்க்கும்.

ஆனால், அரசியல் சட்டம் சூட்டிய ‘இந்தியா’ என்ற பெயரை இவர்கள் ஏற்க மாட்டார்கள். ‘பாரத்’, ‘பாரதியம்’, ‘பாரத தேசம்’ என்று பெயர் சூட்டிக் கொள்வார்கள்.

எந்தத் தாய்க்கு மாநிலம் பிறந்தாலும் அனைத்து மாநிலங்களுக்குமே சமஸ்கிருதமே தாய் என்று சாதிப்பார்கள்; சொந்தத் தாயை ஏற்க முடியாது என்பார்கள்.

நவம்பர் 1 – மொழி வழி மாநிலம் பிரிக்கப்பட்டபோது அதை எதிர்த்து, பா.ஜ.க.வின் ‘மூதாதை’யரான இந்து மகாசபை, ‘பாரத பூமி பிளவுபட்டு விடும்’ என்றார்கள். அப்போது பா.ஜ.க. எனும் குழந்தை பிறக்கவே இல்லை. முதலில் பிறந்தது இந்து மகாசபை. அந்தத் தாய்க்குப் பிறந்தது ஜனசங்கம். அந்தத் தாய்க்குப் பிறந்தது தான் பாரதிய ஜனதா. ஆக பாரதிய ஜனதாவே பெயர் சூட்டிய குழந்தையே தவிர, பிறந்த குழந்தையல்ல. அண்ணாமலை, ஆர்.எஸ்.எஸ். அலமாரிகளில் இருக்கும் ‘ஜாதகத்தை’ எடுத்துப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

மொழிவாரி மாநில புனரமைப்பு ஆணையத்தின் பரிந்துரையை கடுமையாக எதிர்த்து பேட்டி அளித்தவர் ஆர்.எஸ்.எஸ். ‘பிதாமகன்’ கோல்வாக்கர். இது பற்றி ஆர்.எஸ்.எஸ் தலைவர் கோல்வாக்கர் கூறியது என்ன ?

“மாநிலங்கள் புனரமைப்பு கமிஷன் பரிந்துரைகளை கடுமையாக எதிர்த்த கோல்வாக்கர் இதனால் நாடே சிதறிப் போய்விடும் என்றார். மொழி அடிப்படையில் மாநிலங்களைப் பிரிக்காமல் அதற்கு பதிலாக, ஒரே அரசாங்கமே இருக்க வேண்டும். அதுவே இப்போது அவசியம்” என்றார். (A unitary Government prime need of the hour)

**ஆதாரம்: ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு, 26.1.1956**

இப்போது ‘தமிழ்நாடு நலனுக்காக’ பரிந்து கொண்டு வருகிறார். சரி போனது போகட்டும்; இனியாவது, தமிழ்நாடும் தமிழர்களுமே தங்கள் அடையாளம் என்று அண்ணாமலை அறிவிப்பாரா? அதற்கான கருத்தை அமித்ஷாவைக் கேட்டாலும் சரி; ஆளுநர் ரவியைக் கேட்டாலும் சரி; அல்லது காஞ்சி சங்கராச்சாரியைக் கேட்டாலும் சரி; நமக்கொன்றும் ‘ஆட்சேபணை இல்லை’.

**– கோடங்குடி மாரிமுத்து**

தலையங்கம்

## தமிழ்நாடு கல்வித் திட்டத்திற்கு மதச்சாயம் பூச வேண்டாம்

இல்லம் தேடி கல்வி என்ற திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மரக்காணத்தில் தொடங்கி வைத்திருக்கிறார். முதற்கட்டமாக 12 மாவட்டங்களில் மட்டும் இப்போது அமல்படுத்தப்பட இருக்கிறது. பிறகு மாநிலம் முழுவதும் விரிவாக்கப்பட இருக்கிறது. இந்த திட்டத்தை ஒன்றிய அரசின் புதிய கல்வி கொள்கையோடு இணைத்து மதச் சாயம் பூச நினைப்பது முற்றிலும் தவறான பார்வை.

இரண்டு திட்டங்களிலும் தன்னார்வலர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதற்காக இதுவும் மற்றொரு புதிய கல்வி கொள்கை என்பது சரியான கருத்து அல்ல. இரண்டிலும் தன்னார்வலர்கள் பயன்படுத்தப்படுகிற நோக்கங்களே வேறு. புதிய கல்வி கொள்கையின் கீழ் தன்னார்வலர்கள் என்பவர்கள், பள்ளி நிர்வாகத்தில் நேரடியாக தலையிடுவதற்கு உரிமை வழங்கப்பட்டு இருந்தது. அது மட்டுமின்றி பள்ளிகளுக்கு வெளியே முறை சாரா கல்வியை கற்பிக்கிற உரிமையும் அவர்களுக்கு வழங்கப்பட்டு இருந்தது. இதை பயன்படுத்தி ஆர்.எஸ்.எஸ் காரர்கள் தன்னார்வலர்கள் என்ற பெயரில் ஊடுருவி கல்வியை தங்கள் வசப்படுத்திக் கொள்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், கல்வியாளர்கள் பலரும் எதிர்த்தார்கள், நாமும் எதிர்த்தோம். ஆனால் தமிழ்நாடு அரசின் இந்தத் திட்டத்தின் கீழ் தன்னார்வலர்கள் எந்த நோக்கத்தின் கீழ் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதை நாம் கவனிக்க வேண்டும். “தமிழ்நாடு மாநில கல்வி கொள்கை குழு உருவாக்கப்படும். அந்த கொள்கையின் அடிப்படையிலேயே தன்னார்வலர்கள் செயல்படுவார்கள்” என்றும் முதலமைச்சர் அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

கடந்த இரண்டாண்டு காலமாக கொரோனா காலத்தில் பள்ளிகள் மூடப்பட்டு விட்டன. குறிப்பாக 1 முதல் 8ஆம் வகுப்பு வரை குழந்தைகளின் கற்றல் திறன் முற்றாக பாதிக்கப்பட்டுவிட்டது. பள்ளிகளுடைய சூழ்நிலைகளிலிருந்து அவர்கள் விடுபட்டுவிட்டார்கள். அவர்களிடம் மீண்டும் கற்றல் திறனை உருவாக்க வேண்டிய ஒரு காலகட்டம் இது. மீண்டும் அவர்களை பள்ளிக்கு வரவழைக்க வேண்டும். இதற்காக தமிழ்நாடு அரசு உருவாக்கி இருக்கிற திட்டம் தான் ‘இல்லம் தேடி கல்வி’ திட்டம் ஆகும். இந்த கல்வித் திட்டம் மதச்சாயம் கொண்டது, ஆர்.எஸ்.எஸ். ஊடுருவல் இருக்கிறது என்றெல்லாம் பேசுவதில் எந்த உண்மையும் இல்லை. திட்டத்தினுடைய நோக்கம் என்பது அரசு வெளியிட்டிருக்கிற செய்திக் குறிப்பில் தெளிவாக விளக்கப்பட்டு இருக்கிறது.

இந்தத் திட்டத்தில் உள்ளூர் கிராம மக்களின் பங்களிப்பை இணைத்து, நாட்டுப்புற கலை நிகழ்வுகளை நடத்தி, குழந்தைகளை மகிழ்வூட்டி கற்றல் திறனை மேம்படுத்துகிற பணிகளுக்கு தன்னார்வலர்களும், ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் பயன்படுத்தப்பட இருக்கிறார்கள். அவர்கள் வழியாக ஆர்.எஸ்.எஸ் கொள்கை தமிழ்நாட்டில் பரவி விடும் என்றெல்லாம் பேசுவது வீன் கற்பனை ஆகும். தமிழ்நாடு, உத்திரப்பிரதேசமோ, பீகாரோ அல்ல மதவாதத்திற்கு எதிரான, உறுதியான மண் தமிழ்நாடு. மட்டுமின்றி இந்த தன்னார்வலர்கள்,ஓய்வு பெற்ற கல்வியாளர்கள் குழந்தைகளுக்கு பள்ளிக்கு வெளியே எதை கற்பிக்க வேண்டும் என்பதற்கான பாடத்திட்டத்தையும் தமிழ்நாடு அரசு வகுத்துத் தந்திருக்கிறது. அவர்கள் மதக் கல்வியையோ, வேறு பழைய மூட நம்பிக்கைகளையோ குழந்தைகளிடம் கொண்டு சென்று விடக் கூடாது என்பதற்காக பள்ளிச் சூழலில் ஏற்கெனவே பெற்ற கற்றல் திறனை மேம்படுத்த வேண்டும் என்று தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

அது மட்டுமின்றி, ஒவ்வொரு கிராமத்திலும் குழந்தைகள் கற்றலுக்காக கூடும் இடம், மதம் சார்ந்த இடமாக இருக்கக் கூடாது, பாகுபாடுகள் காட்டாத இடமாக இருக்க வேண்டும் என்று அரசு தெளிவாக அறிவுறுத்தியிருக்கிறது. இத்திட்டத்திற்காக தமிழ்நாடு அரசு நிதி நிலை அறிக்கையில் 200 கோடி ரூபாயை ஏற்கெனவே ஒதுக்கி இருக்கிறது. எனவே இது தமிழ்நாடு அரசு செயல்படுத்துகிற திட்டம்.

ஒன்றிய ஆட்சியின் கீழ், ‘சமக்ர சிக்ஷா’ என்ற திட்டம் இந்தியா முழுவதும் அமல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் மட்டும் நடைமுறைப்படுத்தப்படுகிற திட்டம். ஒன்றிய ஆட்சியின் திட்டத்தை செயல்படுத்தப்படுகிற அதிகாரியின் கீழ் தான் தமிழ்நாட்டின் ‘இல்லம் தேடி கல்வி’ திட்டத்தின் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று ‘தினமலரில்’ செய்தி வெளியிட்டிருப்பது, முற்றிலும் மாறானது. உண்மைக்கு புறம்பானது.

மாவட்ட ஆட்சியர் தலைமையின் கீழ் பல்வேறு கல்வித் துறை அதிகாரிகளைக் கொண்ட நான்கு அடுக்கு நிர்வாக கட்டமைப்பு இதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நிர்வாக கட்டமைப்பு தான் இந்த பணிகளை மேற்கொள்ளும். தன்னார்வலர்களையும் இந்த குழு தான் தேர்வு செய்யும். பள்ளிக்கு வெளியே தன்னார்வலர்கள் கற்றுத் தரக் கூடிய பாடத் திட்டங்களையும், தமிழ்நாடு அரசின் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் தான் உருவாக்கித் தந்திருக்கிறது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். ஒன்றிய அரசு அல்ல. உள்ளூர் தன்னார்வலர்களாக, உள்ளூர் பகுதியைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை தரப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இத்திட்டம் 2021-2022ஆம் கல்வியாண்டில் மே மாதம் வரை மட்டுமே நீடிக்க வேண்டும் என்று அரசு தெளிவுபடுத்தி இருக்கிறது. மேலும் விவரங்களை தேட (http://illamthedikalvi.tnschools.gov.in) என்ற இணையதளத்தை பார்த்து மேலும் தெரிந்து கொள்ளலாம்.

தமிழ்நாட்டுக் குழந்தைகள் கொரோனா பாதிப்பால் இழந்துவிட்ட கற்றல் திறனை மேம்படுத்தும் ஒரு மகத்தான திட்டம் இது. உள்ளூர் மக்களின் பங்களிப்போடு இத்திட்டம் உருவாகியிருப்பது மேலும் தனிச்சிறப்பு. இந்தியாவிலேயே முதன் முதலாக திமுக ஆட்சி தான் இதை நடைமுறைப் படுத்துகிறது. இதில் ஆர்.எஸ்.எஸ். ஊடுறுவிவிடும் என்பதெல்லாம் வீண் கற்பனை. மரக்காணத்தில் இத்திட்டத்தை தொடங்கி வைத்து தமிழ்நாடு முதல்வர் பேசியதை நினைவு கூற விரும்புகிறேன். ‘இத்திட்டம் இலட்சக் கணக்கான மாணவ, மாணவிகளின் வாழ்க்கையில் ஒளி ஏற்றப் போகிறது. நூற்றாண்டு காலமாக புறக்கணிக்கப்பட்ட கல்வியை மக்களிடம் கொண்டு சேர்த்தது திராவிட இயக்கம் தான். திராவிட இயக்கம் என்றால் என்ன வென்று கேள்வி கேட்கும் கோமாளிகளும், அதைப் பற்றி அறியாதவர்களும் கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறார்கள். இது தான் திராவிடக் கொள்கை என்பதை மறந்துவிடக் கூடாது’ என்று முதலமைச்சர் தெளிவாக பேசி இருக் கிறார். எனவே இத்திட்டத்திற்கு மதச்சாயம் பூசுவது என்பது வீண் கற்பனை.

## தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழக நிர்வாகமே, விநாயகர் கோவில் கட்டுவதை உடனடியாக நிறுத்து

பொது இடங்களில் கோயில்கள் உள்ளிட்ட வழிபாட்டு தலங்கள் கட்டுவது கூடாது என்று அரசு ஆணைகள் தெளிவாக கூறுகின்றன. உச்சநீதிமன்றமும், தமிழ்நாடு உயர்நீதி மன்றமும் பல வழக்குகளில் இதை திட்டவட்டமாக தெரிவித்திருக்கிறது. அண்மையில் கூட சென்னை உயர்நீதி மன்றம், பொது இடங்களை ஆக்கிரமித்து கட்டப்பட்டிருக்கும் கோயில்கள் அகற்றப்பட வேண்டும். இதற்கு மேல் எந்த பொது இடங்களிலும் எவரும் சிலைகள் வைக்க கூடாது என்றும் ஒரு தீர்ப்பை அண்மையில் வழங்கியிருக்கிறது. குறிப்பாக பல்கலைக்கழகங்களில் இது போன்ற கோவில்கள் கட்டப்படுவது என்பது நிச்சயமாக சட்டத்திற்கு புறம்பான ஒன்றாகும்.

‘தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்’ (Tamilnadu Teachers Education University) என்ற அரசு பல்கலைக்கழகம் ஒன்று சென்னை காரப்பாக்கத்தில் இயங்கி வருகிறது. இது 2008ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. ஆசிரியர் பணிகளுக்காக, கல்வியியல் கல்லூரிகளை இணைத்து நடத்தப்படுகிற பல்கலைக்கழகம் இது. இந்த பல்கலைக் கழகத்தின் வளாகத்திற்குள் மிகப்பெரிய விநாயகர் கோவில் ஒன்று இப்போது மிக வேகமாக கட்டப்பட்டுக்கொண்டு இருக்கிறது. இன்னும் ஒரு பத்து நாட்களில் அந்த கோவில் கட்டி முடிக்கப்படும் என்று தகவல்கள் வருகின்றன.

ஒரு பல்கலைக்கழகத்தில் பல்வேறு மத நம்பிக்கையாளர்கள் படிக்க வருகிறார்கள். ஆனால் பல்கலைக்கழக வளாகம் என்பதே ஏதோ ஒரு குறிப்பிட்ட மதத்திற்குச் சொந்தமானது என்று சில துணைவேந்தர்கள் நினைத்துக் கொண்டு சட்டத்திற்கும், அரசு விதிகளுக்கும் புறம்பாக இத்தகைய கோவில்களை எழுப்புவது என்பது வன்மையான கண்டனத்திற்குரியது. இது நீதிமன்றங்கள் வழங்கியிருக்கிற பல தீர்ப்புகளுக்கும் எதிர்ப்பான ஒன்று ஆகும்.

தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம், அதன் துணைவேந்தர் ஆதரவோடு நடைபெறும் கோவில் கட்டுமானத்தை உடனடியாக நிறுத்த வேண்டும். இல்லையேல் இதை எதிர்த்து நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடர வேண்டிய நிலை உருவாகி விடும். இந்த நிலையை நிறுவனமும், பல்கலைக்கழக துணைவேந்தர்களும் உருவாக்கி விட வேண்டாம் என்று கேட்டுக் கொள்கிறோம்.

## கிரிக்கெட்டில் சங்கிகளின் இஸ்லாமிய வெறுப்பு

உ.பி. தேர்தலில் மக்கள் செல்வாக்கை இழந்துள்ள பா.ஜ.க. ஆட்சி, இஸ்லாமியர்களை எதிரிகளாக்கி, இந்துக்கள் வாக்குகளை மத அடிப்படையில் வாரிக் கொள்ளலாம் என்ற வழமையான தந்திரத்தில் இறங்கியிருக்கிறது. டி-20 கிரிக்கெட் விளையாட்டில் பாகிஸ்தானிடம் - இந்தியா தோல்வியைத் தழுவியதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் வெற்றியைக் கொண்டாடியதாக ஜம்மு-காஷ்மீர், உ.பி., இராஜஸ்தான் மாநிலங்களில் மாணவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். உ.பி., ஜம்மு-காஷ்மீர் மாநிலங்களில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் மீது சட்ட விரோத நடவடிக்கைத் தடுப்புச் சட்டம் (UAPA) பாய்ந்துள்ளது. 2 ஆண்டுகள் விசாரணையின்றி சிறையில் அடைத்து வைக்கலாம். இராஜஸ்தான் காங்கிரஸ் ஆட்சியும், ஒரு பெண் ஆசிரியை பதவி நீக்கம் செய்து கைது செய்திருக்கிறது. அனைவருமே இஸ்லாமியர்கள்.

நடப்பது ஒரு விளையாட்டுப் போட்டி. இதில் இந்தியாவிலுள்ள அனைவருமே இந்தியர் தான் வெற்றி பெற வேண்டும் என்ற மன நிலையில் கட்டாயம் இருக்க வேண்டும். மாற்றி சிந்திப்பது, தேசத் துரோகம் என்றால், தே பக்தியை இவர்களே கேலிப் பொருளாக்குகிறார்கள் என்பதுதான் அர்த்தம். ‘இந்து’ ஆங்கில நாளேடு இது ‘அற்பமானது’ என்று தலையங்கமே தீட்டியிருக்கிறது.

அமெரிக்கா, இலண்டன் போன்ற நாடுகளில் இந்தியர்கள் குடியுரிமை பெற்று வாழ்கிறார்கள். அவர்கள் இந்தியாவின் வெற்றியை அந்த நாடுகளில் கொண்டாடினால் அவர் குடியுரிமை பெற்று வாழுகிற நாடுகளுக்கு தேச விரோதிகளாகி விடுவார்களா?

இந்திய கிரிக்கெட் அணியில் பந்து வீச்சாளராக முகம்மது ஷமி விளையாடினார். இவர் பாகிஸ்தானுக்கு ஆதரவாக விளையாடியதால்தான் இந்தியா தோற்றது என்று சமூக வலைதளங்களில் ‘சங்கிகள்’ அவதூறு பரப்புகிறார்கள். தோல்விக்கு ஒருவரை மட்டுமே பொறுப்பாகி விடுவார்களா? அணியில் விளையாடியவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள் தானே!

இந்த மத வெறுப்புப் பிரச்சாரத்துக்கு இந்திய அணியின் தலைவர் விராட் கோலி கடும் கண்டனம் தெரிவித்துள்ளதோடு, அணியின் ‘சகோதரத்துவத்தை’ சீர்குலைக்கும் முயற்சி என்று கடுமையாக சாடியுள்ளார்.

2007ஆம் ஆண்டு சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விராத் கோலி கேப்டனாக இருந்தபோது இந்தியா பாகிஸ்தானிடம் தோற்றது.

2016இல் நியுசிலாந்தில் நடந்த போட்டியில் கேன் வில்லியம் சன் கேப்டனாக விளையாடியபோது, பாகிஸ்தானிடம் இந்தியா தோற்றிருக்கிறது. இதற்கெல்லாம் யாரை குற்றம் சாட்டுவார்கள்?

அய்.பி.எல். போட்டிக்கு வெளிநாட்டுக்காரர்களையே ஏலம் எடுத்து விளையாட வைக்கிறார்களே, அதற்கு என்ன பெயர் சூட்டுவது?

உலக நாடுகளில் ‘இந்தியாவை’ப் பார்த்து மதிக்குமா? வெட்கித் தலைகுனியுமா?

### அவர்களுக்கு சுயமரியாதையே இல்லை



ஆந்திரா பிரிந்ததில் இருந்தே எனக்கு பொதுவாக நாட்டுப் பிரிவினையில் நாட்டமில்லாமல் போய்விட்டது. கன்னடன், மலையாளி ஒரு சில காரணங்களுக்காக பிரிந்தால் தேவலாம், ஏனென்றால் அவர்களுக்கு, சுயமரியாதையோ, பகுத்தறிவோ, இனப்பற்றோ கிடையாது. மேலும், மத மூட நம்பிக்கைகளில் (பார்ப்பனிய சடங்குகள்) மூழ்கிக் கிடக் கிறார்கள். இதனால் பிரிந்தால் தேவலாம். – விடுதலை 11.10.1955

## பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து பா.ஜ.க. ஆட்சி வரை (14)

# ஜனநாயகக் கட்டமைப்புகள் சிதைக்கப்பட்டன

விடுதலை இராசேந்திரன்

***பிரிட்டிஷ் ஆட்சி – காங்கிரஸ் ஆட்சி காலங்களில் தமிழர் உரிமைகள் பறிக்கப்பட்ட வரலாறுகளைத் தொடர்ந்து இத்தொடரில் – அதைவிட மோசமாக பா.ஜ.க. ஆட்சியின் ‘இருண்டகால’ வரலாற்றை சுருக்கமாகப் பார்ப்போம்.***

“தேசியம் - பெரும்பான்மை-மதச்சார்பின்மை” என்ற சொல்லாடல் வழியாக சங்பரிவாரங்கள் திணித்து வைத்துள்ள நச்சு சிந்தனைகளின் அடிப் படையில் அதன் எதேச்சாதிகார அதிகாரப் பறிப்புகள் தொடருகின்றன. அவற்றை சுருக்கமாகப் பட்டியலிடுவோம்.

### திட்டக்குழு – நிதிஅயோக்காக மாற்றப்பட்டது

இந்தியாவில் சுதந்திரத்துக்குப் பிறகு பன்முகத் தன்மை கொண்ட மாநிலங்களுக்கு அதற்கேற்ற திட்டங்களை உருவாக்கவும் அது குறித்து சுதந்திரமான விவாதங்கள் உரையாடல்களுக்கு வழி வகுக்கும் திட்டக்குழு உருவாக்கப்பட்டது. பல்வேறு துறைகளைச் சார்ந்த நிபுணர்கள் இதில் இடம் பெற்றிருந்தனர். அரசின் தலையீடு இல்லாத சுயேட்சை அமைப்பாக செயல்பட்டு வந்தது (திட்டக்குழு மாநிலங்களிடையே பாகுபாடு காட்டும் அமைப்பு என்ற விமர்சனமும் உண்டு). ஆனால், மோடி பிரதமர் பதவியேற்று 2014ஆம் ஆண்டு அவரது ‘முதல் சுதந்திர நாள்’ உரையில் திட்டக்குழு என்பதே ஒழிக்கப்பட்டு, அதற்கு பதிலாக ‘இந்தியாவை மாற்றியமைக்கும் தேசிய நிறுவனம்’ (National Institution for Transforming Inida (NITI)) - என்ற அமைப்பை உருவாக்கப் போவதாக அறிவித்தார். துறைசார் நிபுணர்கள் ஓரம் கட்டப்பட்டு, அதற்கு பதிலாக அரசு அதிகாரவர்க்க நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது. நாட்டின் பிரச்சினைகளை ஆராயக் கூடியவர்கள் அதில் இடம் பெறவில்லை. பொருளாதார ஆய்வுகளோ புள்ளி விவரங்களோ திரட்டப்படவில்லை. சுகாதாரம் - விவசாயம் - வேலை வாய்ப்புகள் குறித்து திட்டமிடக்கூடிய நிபுணத்துவம் இல்லாத அமைப்பாக அது முடங்கிப் போனது. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும் அரசுக்கும் இடைத் தரகராக செயல்படும் அமைப்பாகியது.

### தேர்தல் ஆணையம் சீர்குலைவு

தேர்தல் ஆணையம் - அரசியல் சட்டத்தின் கீழ் தன்னாட்சியுடன் செயல்படுவதற்காக உருவான அமைப்பு - பா.ஜ.க. ஆட்சியின் ‘கைபொம்மையாக’ மாறிக் கிடக்கிறது. ஆளும் பா.ஜ.க.வின் விருப்பு வெறுப்புக்கேற்ப தேர்தல்களை நடத்தி வருகிறது இந்த அமைப்பு. இதற்கு ஏராளமான சான்றுகளை பட்டியலிட முடியும். பா.ஜ.க. ஆட்சியின் நலனுக்காகவே 2019ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலை ஏழு கட்டங்களாகப் பிரித்து நடத்தியது.

- 2017ஆம் ஆண்டு குஜராத்-ஹிமாச்சலப் பிரதேச மாநில சட்டசபைகளுக்கு தேர்தல் நடந்த போது தேர்தல் தேதி அறிவிப்புகளில் ஆணையம் பா.ஜ.க.வின் நலனுக்காக முறைகேடாக செயல் பட்டது. இரண்டு மாநிலங்களுக்கும் வாக்கு எண்ணிக்கைக்கு ஒரே தேதி தான் என்றாலும், குஜராத் தேர்தலை அறிவிக்காமல், இமாச்சலப் பிரதேச தேர்தல் தேதியை மட்டும் அறிவித்தார்கள். குஜராத் மாநில அரசு வாக்காளர்களிடம் ஓட்டு வாங்க சில புதிய திட்டங்களை அறிவிக்க வேண்டும் என்பதற்காகவே முறைகேடாக இந்த கால அவகாசம் தரப்பட்டது.

- 2018 ஜனவரியில் தேர்தல் ஆணையத்தின் தலைவராக இருந்தவர் ஜோதி. டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மி கட்சியின் 20 சட்டமன்ற உறுப் பினர்களை பதவி நீக்கம் செய்து அறிவித்தார். வருமானம் வரக் கூடிய பதவிகளை வகித்தார்கள் என்பது குற்றச்சாட்டு. இது குறித்து அந்த சட்டமன்ற உறுப்பினர்களிடையே எந்த விளக்கமும் கேட்காமலேயே தேர்தல் ஆணையம் பதவியைப் பறித்தது என்பதுதான் இதில் முக்கியமானது. பாதிக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்கள். தேர்தல் ஆணையம் பதவிப் பறிப்பு உத்தரவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. தீர்ப்புக்குப் பிறகு, ஆம் ஆத்மி கட்சியின் 20 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவியை உறுதி செய்யாமல் பா.ஜ.க. ஆட்சிக்கு சாதகமாக வேண்டுமென்றே ஒரு ஆண்டு காலம் வரை இதில் எந்த முடிவையும் எடுக்காமல் கிடப்பில் போட்டது தேர்தல் ஆணையம்.

- தமிழ்நாட்டில் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அ.இ.அ.தி.மு.க.வின் ஓ.பி.எஸ். அணி, சசிகலா அணிக்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்தியது. முதலமைச்சர் பதவியில் தன்னைத் தொடர சசிகலா அனுமதிக்காமல், அவரே முதல்வர் பதவியைப் பறித்துக் கொண்டார் என்பதே ஓ.பன்னீர் செல்வத்தின் ஆத்திரம். சசிகலா முதல்வராக தேர்வு செய்யப்பட்டாலும் பதவி ஏற்க முடியவில்லை. சொத்துக் குவிப்பு மோசடி வழக்கில் அவருக்கு சிறைத் தண்டனை உறுதி யானது. எடப்பாடி பழனிச்சாமியை சசிகலா முதல்வராக்கினார். தி.மு.க. நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வந்தது. ஓ. பன்னீர்செல்வம் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 11 பேர் சொந்தக் கட்சிக்கு எதிராக வாக்களித்தனர். நியாயமாக கட்சிமாறல் தடுப்புச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியவர்கள். ஆனால் நடவடிக்கை எடுக்க வில்லை. எடப்பாடி பழனிச்சாமிக்கு எதிராக அவரது தலைமையை மாற்ற வேண்டும் என்று ஆளுநரிடம் புகார் தந்த 18 எம்.எல்.ஏ.க்கள் பதவியைப் பறித்து உத்தரவிட்டார் சபாநாயகர். இந்தத் தேர்தலை உடனே நடத்தாமல் காலம் தாழ்த்தி, அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் கவிழாமல் பா.ஜ.க. ஆணைக்கேற்ப செயல்பட்டது தேர்தல் ஆணையம். வேறு வழியில்லாமல் இப்போது நாடாளுமன்றத் தேர்தலோடு 21 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் ஆணையம் தேர்தல் அறிவித்திருக்க வேண்டும். ஆனால் 18 சட்டமன்ற தொகுதிகளுக்கு மட்டுமே அறிவித்தது. 3 சட்டமன்ற தொகுதிகளில் தேர்தல் வழக்கு இருப்பதாக சமாதானம் கூறியது. 21 சட்டமன்ற தொகுதிகளுக்கும் தேர்தல் நடத்தப்பட்டு அதில் எதிர்க்கட்சி வெற்றி பெற்று விட்டால் அ.இ.அ.தி.மு.க. மெஜாரிட்டிக்கு நெருக்கடி வந்துவிடும் என்பதால் அதில் 3 தொகுதிகளை பாதுகாப்பாக தேர்தல் நடத்தாமல் ஒதுக்கி வைப்பதே தேர்தல் ஆணையத்தின் நோக்கம். இப்போது சென்னை உயர்நீதிமன்றமும் உச்சநீதி மன்றமும் வழக்கு நிலுவையில் இருப்பதைக் காரணம் காட்டி தேர்தலைத் தள்ளிப் போடுவது சரியான காரணம் அல்ல. ஏற்கனவே வழக்கு நிலுவையில் உள்ள தொகுதிகளில் தேர்தல் நடந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டி யிருக்கிறது. தேர்தல் ஆணையத்தின் முகத்திரை கிழிந்து தொங்குகிறது.

> - *மதச்சார்பின்மை என்பது மோசமான வார்த்தை என்று உள்துறை அமைச்சர் ராஜ்நாத்சிங் பேசினார்.*
> - *டெல்லி சட்டமன்ற உறுப்பினர்களின் விளக்கத்தைக் கேட்காமலேயே தேர்தல் ஆணையம் அவர்களின் பதவி பறித்தது.*
> - *ஊழலை ஒழிப்பதாகக் கூறி பதவிக்கு வந்தவுடன், பல ஊழல் அதிகாரிகளை, தங்களுக்கு உதவி னார்கள் என்று பதவி வழங்கி காப்பாற்றியது மோடி ஆட்சி.*

- ஜெயலலிதா மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருந்தபோது மூன்று இடைத் தேர்தல்கள் நடந்தன. அதில் ஒன்று திருப்பரங்குன்றம் இடைத் தேர்தல். அ.இ.அ.தி.மு.க. வேட்பாளருக்கு அவர் கட்சி வேட்பாளர் என்று சான்றளித்து ஜெயலலிதா கட்சியின் பொதுச் செயலாளர் என்ற முறையில் வேட்புமனுவில் கையொப்பமிட வேண்டும் என்பது தேர்தல் விதி. ஜெயலலிதாவால் கையொப்பமிட முடியவில்லை; விண்ணப்பப் படிவத்தில் அவரது கை நாட்டுப் பெற்றுள்ளதாகக் கூறி, கட்சி சார்பில் சமர்ப்பித்தார்கள். அது ஜெயலலிதாவின் கைவிரல் ரேகை தானா என்பதை முறையாக உறுதிப்படுத்தாமல் சமர்ப்பித்த விண்ணப்பத்தை தேர்தல் ஆணையம் ஏற்றுக் கொண்டது. இப்போது சென்னை உயர்நீதிமன்றம் இது மோசடி (fraud) என்று தீர்ப்பளித்துள்ளது. தேர்தல் ஆணையம் எந்த பதிலும் கூறாமல் வாய்மூடி நிற்கிறது.

- ஊழல் ஒழிப்புக்கான ‘லோக்பால்’ அமைப்புக்கு தலைவரை நியமிக்கக் கோரி உச்சநீதிமன்றம் தொடர்ந்து வலியுறுத்தியபோது அதைக் கண்டுகொள்ளாத பிரதமர் மோடி, தேர்தல் தேதி அறிவிப்புக்குப் பிறகு ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி ஒருவரை (பிளாக்கி சந்திர கோஷ்) இப்பதவிக்கு நியமித்து ஊழல் ஒழிப்புக்கு தமது ஆட்சி தயாராக இருப்பதாக வாக்காளர்களுக்கு உணர்த்த விரும்பினார். தேர்தல் நடத்தை விதிகளுக்கு எதிரான இந்த முறைகேட்டை தேர்தல் ஆணையமும் ஒத்துக் கொண்டது.

இவை சில உதாரணங்கள் மட்டுமே.

### சி.பி.அய். நம்பகத் தன்மை குலைப்பு

5 ஆண்டு மோடி ஆட்சியில் சீர்குலைக்கப்பட்ட மற்றொரு அமைப்பு சி.பி.அய். என்ற மத்திய புலனாய்வுத் துறை. மத்திய கண்காணிப்பு ஆணையம் என்ற சுயேட்சை அதிகாரம் கொண்ட அமைப்பின் கண்காணிப்பில் செயல்படும் புலனாய்வுத் துறை சி.பி.அய்.

ஊழல் ஆட்சியான காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்று கூறி ஆட்சிக்கு வந்தார் மோடி. ஆனால் காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் சி.பி.அய். இயக்குனராக நியமிக்கப்பட்ட ரஞ்சித் சின்கா என்பவரை மட்டும் அப்படியே பதவியில் தொடர அனுமதித்தது மோடி ஆட்சி. ரஞ்சித் சின்கா, பல ஊழல் வழக்குகளின் விசாரணையில் முறைகேடாக தலையிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்குள்ளான ஒரு அதிகாரி. உச்சநீதி மன்றமே இந்த அதிகாரியின் முறைகேடுகளைக் கண்டித்த நிலையிலும் அவர் பதவிக் காலம் முடியும் வரை பதவியில் தொடர அனுமதித்தது மோடி ஆட்சி. அதற்குக் காரணம் என்ன தெரியுமா? இஷ்ரத் ஜஹான் போலி என்கவுண்டர் வழக்கில் முக்கிய குற்ற வாளியான அமீத்ஷாவை தனது ஜூனியர் அதிகாரிகளின் கருத்துகளைப் புறந்தள்ளிவிட்டு அவர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யாமல் காப்பாற்றியவர் என்பதால்தான். அதற்கு மோடி ஆட்சி தந்த வெகுமதிதான் பதவி நீடிப்பு.

ரஞ்சித் சின்கா பதவி ஓய்வுக்குப் பிறகு இயக்குனர் பதவிக்கு வந்த அனில் குமார் சின்காவும் அமீத் ஷாவைக் காப்பாற்றும் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டார். 2014 டிசம்பர் மாதம் விசாரணை நீதிமன்றம் அமீத்ஷாவை விடுவித்ததை எதிர்த்து சி.பி.அய். மேல்முறையீட்டுக்குச் சென்றிருக்க வேண்டும். அப்படி செய்யாமல் அமீத் ஷாவை காப்பாற்றினார் அனில் குமார் சின்கா.

பல்வேறு வங்கிகளில் கடன் வாங்கி, பல ஆயிரம் கோடி மோசடி செய்த விஜய் மல்லையா தேடப்படும் குற்றவாளி என்று அறிவிக்கப்பட்ட நிலையில் 2015இல் அவர் பாதுகாப்பாக இலண்டனுக்கு தப்பி செல்ல உதவியது சி.பி.அய்.

- 2016ஆம் ஆண்டு பி.கே. பன்சால் என்ற மூத்த அதிகாரி (60), அவரது மகன் யோகேஷ் (31) இருவரும் கிழக்கு டெல்லியில் உள்ள அவரது வீட்டில் தற்கொலை செய்து கொண்டார்கள். பன்சால் கார்ப்பரேட் கம்பெனிகள் தொடர்பான ஊழல் வழக்குகளை விசாரிக்கும் பிரிவுக்கு தலைமை இயக்குநராக இருந்தவர். ஒரு ஊழல் வழக்கு விசாரணையில் தாம் ஈடுபட்டிருந்தபோது சி.பி.அய். தன்னை அவமதித்து சித்திரவதை செய்தது என்றும், அதன் காரணமாகவே தற்கொலை செய்து கொள்வதாகவும் கடிதம் எழுதி வைத்திருந்தார். அதற்கு முன்பே தனது கணவருக்கு சி.பி.அய். தரும் அவமானங்களைத் தாங்கிக் கொள்ள முடியாமல் அவரது மனைவி சத்யபாலா, மகள் நேகா இருவரும் தற்கொலை செய்து கொண்டனர்.

- குஜராத்தில் 2002இல் மோடி முதல்வராக இருந்தபோது இஸ்லாமியர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்துவிட்ட இனப் படுகொலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகப் போராடியவர் சமூகப் போராளி டீஸ்தா செதால் வாட் அதற்காக 2015ஆம் ஆண்டு 16 பேர் அடங்கிய சி.பி.அய். குழு வெளிநாட்டுப் பணம் அவருக்கு வருவதாகக் கூறி மும்பையில் அவரது வீட்டுக்குள் சோதனை நடத்தியது; தொடர்ந்து அவரை அலைக் கழித்தது.

- அய்க்கிய முற்போக்குக் கூட்டணியின் இரண்டா வது காலகட்ட ஆட்சி காலத்தில் இமாச்சல பிரதேச முதல்வராக இருந்தவர் வீரேந்திரா சிங்.

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# ஈரோடு தெற்கு மாவட்டத்தில் கழகத்தினர் நடத்திய ‘இல்ல சந்திப்பு’



திவிக ஈரோடு தெற்கு மாவட்டத் தோழர்களின் இல்ல சந்திப்பு 26.09.2021 காலை 9:30 மணிக்கு ஆரம்பமானது. முதல் சந்திப்பு ஆசிரியர் சிவக்குமார் இல்லத்தில் தொடங்கியது. காலை உணவு அருந்தியபடியே தோழர்கள் உரையாடினர். பிறகு சி.எம். நகர் பிரபு இல்லம், சித்தோடு கமலக்கண்ணன் இல்லம், முன்னாள் மாவட்டச் செய லாளர் கு. சண்முகப்பிரியன் இல்லத்தில் தோழரின் உடல் நலம் குறித்த விசாரிப்பும் , உரையாடலுமாக சந்திப்பு நிகழ்ந்தது. பிறகு பெருமாள் மலை ராசண்ணன் இல்லத்திலும், கொங்கம்பாளையம் அருள் இல்லத்திலும், நசியனூர் குமார் இல்லத்திலும் சந்தித்து உரையாடினர். தொடர்ந்து செம்மாம்பாளையம் கணேஷ் இல்லத்திலும், ரங்கம்பாளையம் கிருஷ்ணன்-மணிமேகலை இல்லத்திலும், அதே பகுதியில் வசிக்கும் விஜயரத்தினம் கடையில் தோழர்களின் முதல் கட்ட சந்திப்பும், உரையாடலும் இனிதே நிறைவு பெற்றது.

ஒவ்வொரு தோழர்களின் இல்லத்திலும் இனிப்புகளும், பலகாரமும், பழங்கள், பழச்சாறு, தேநீரென தோழமையும் அன்புமான உபசரிப்பிலும் கழகத்தின் அடுத்த கட்ட பணிகளுக்கான திட்டமிடலும் என பயனுள்ள சந்திப்பாகவும், கழகப் பணிகளை முன்னைவிட வீரியமாக முன்னெடுத்துச் செல்வதற்கான முனைப்பும் ஒவ்வொரு தோழரின் பேச்சுகளில் நம்பிக்கையோடு எதிரொலித்தது.

இப்பயனுள்ள தோழர் சந்திப்பில் மாநில அமைப்புச் செயலாளர் ப. இரத்தின சாமி, ஆசிரியர் சிவக்குமார், மாவட்டச் செயலாளர் யாழ் எழிலன், மாவட்ட அமைப்பாளர் பெ. கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட பொருளாளர் கிருஷ்ணன், மாநகரத் தலைவர் ப.குமார், மாநகர இணைச் செயலாளர் கணேஷ், சித்தோடு கமலக் கண்ணன், ரங்கம்பாளையம் பிரபு, விருதுநகர் செந்தில் ஆகியோர் பங்கேற்றனர்.

## யாழ் பிரபா- மணிகண்டன் இணையேற்பு ஒப்பந்த விழா

கழகத் தோழர் யாழ் இரவி- திராவிடச்செல்வி இணையரின், மகள் யாழ் பிரபா- மணிகண்டன் ஆகியோரின் இணையேற்பு ஒப்பந்த விழா 2.09.2021 மாலை 6 மணியளவில், மேடவாக்கம் M's பார்ட்டி ஹாலில் நடைபெற்றது. திராவிடச் செல்வி மறைந்த கழகப் பேச்சாளர் கீசகனின் மகள் வயிற்றுப் பேத்தி ஆவார்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று இணையேற்பை நடத்தி வைத்தார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், புதிய குரல் ஓவியா, தமிழக மக்கள் முன்னணி பொழிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

கழக ஏட்டிற்கு நன்கொடையாக ரூ. 2000/- வழங்கினர்.

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாகக் கூறி அவரது டெல்லி வீட்டில் சி.பி.அய். சோதனை நடத்தியது. சோதனை நடத்திய நாள் அவரது வீட்டில் மகளுக்குத் திருமணம் நடந்த நாள்.

அனில்குமார் சின்காவின் பதவிக் காலம் 2016 டிசம்பரில் முடிவடையும் நிலையில் இயக்குனர் பதவிக்கு வர வேண்டியவர் அடுத்த நிலையில் இருந்த ஆர்.கே. தத்தா. அவர் தங்களது முறைகேடுகளுக்கு ஒத்துழைக்க மாட்டார் என்று கருதிய மோடி ஆட்சி, அவரை உள்துறை அமைச்சகத்துக்கு இடமாற்றம் செய்தது. மூத்த அதிகாரி இடமாற்றம் செய்யப் பட்டதால், கூடுதல் இயக்குனராக இருந்த நாகேஷ் அஸ்தானா என்பவர் தற்காலிக இயக்குநராக நியமிக்கப்பட்டார். சி.பி.அய். இயக்குநர்களை தேர்வு செய்வதற்கு உயர்மட்டக் குழு ஒன்று இருக்கிறது. அதில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் இடம் பெற்றிருப்பார்கள். இயல்பாக இயக்குனராக வேண்டிய ஆர்.கே. தத்தா, நிலக்கரி ஒதுக்கீடு தொடர்பான வழக்கை விசாரித்து வந்தவர் என்பதோடு உச்சநீதிமன்றம் இந்த விசாரணையில் தொடர்புடைய அதிகாரிகளை இடமாற்றம் செய்யக்கூடாது என்று உத்தரவிட்டிருந்தது. ஆனாலும் நியாயமான விசாரணையை நடத்தி வந்த அந்த அதிகாரியை உச்சநீதிமன்ற உத்தரவையும் மதிக்காமல் அவர் சி.பி.அய். தலைமைப் பொறுப்புக்கு வந்து விடாமல் தடுக்க இடமாற்றம் செய்தார்கள். 2017 பிப்ரவரியில் அவர் ஓய்வு பெற்றார். அவரைத் தொடர்ந்து அசோக் குமார் வர்மா என்ற இயக்குனரை உயர்மட்டக் குழு நியமித்தது.

இந்த நியமனத்தை விரும்பாத மோடி, குஜராத்தைச் சார்ந்த அஸ்தனா என்பவரை மத்திய கண்காணிப்பு வாரியத்தின் வழியாக சிறப்பு இயக்குனராக நியமித்தார். இவர் ஏற்கனவே ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர் என்பதால் இயக்குனர் வர்மா, சிறப்பு இயக்குநராக நியமிக்கப்பட்ட அஸ்தனாவின் நியமனத்தை எதிர்த்தார். வர்மா மீது எதிர் ஊழல் குற்றச்சாட்டை அஸ்தனா சுமத்தவே சி.பி.அய். அமைப்பு சந்தி சிரித்தது. ஒரு நள்ளிரவில் மோடி ஆட்சி இருவரையும் நீக்கி நாகேஸ்வரராவ் என்பவரை இடைக்கால இயக்குநராக நியமித்தது. (இயக்குநர் பதவி என்றால் மட்டுமே உயர்மட்டக் குழு நியமிக்க முடியும்; இடைக்கால இயக்குநரை அரசே நியமிக்கலாம்) பிரச்சினை உச்சநீதிமன்றம் போனது. வர்மா முறையான இயக்குநர் என்று அறிவித்த உச்சநீதிமன்றம் அதற்கு அடையாளமாக ஒரு நாள் மட்டும் அவர் இயக்குநராக இருக்கலாம் என்று கூறவே, அவர் தன்மானத்தோடு பதவியை இராஜினாமா செய்வதாக அறிவித்து விட்டார். சி.பி.அய். என்ற அமைப்பை இப்படியெல்லாம் தனது சொந்த நலனுக்கு பந்தாடியது மோடி ஆட்சி.

இப்போது, இராஜஸ்தான், மகாராஷ்டிரா, கேரளா உள்ளிட்ட மாநில ஆட்சிகள், தங்கள் அனுமதியின்றி சி.பி.அய். விசாரணைக்கு தடை போட்டுள்ளன.

(தொடரும்)

# ‘நீட்’ மற்றொரு உயிர் பலி: தமிழ்நாடு மாணவர் கழகம் மாணவரின் குடும்பத்தினருக்கு நேரில் ஆறுதல்

கோவை மாவட்டம், கிணத்துக்கடவு பகுதி நெம்பர் 10, முத்தூரைச் சேர்ந்த மாணவர் கீர்த்தி வாசன் நீட் தேர்வு எழுதி முடிவுக்கு காத்திருந்த நிலையில் 30.10.2021 அன்று திடீரென தற்கொலை செய்து கொண்டார்.

தகவலறிந்த உடன் 31.10.2021 ஞாயிற்றுக் கிழமை அன்று தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர்கள் அவரது குடும்பத்தை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர்.

கிராமப்புற விவசாய குடும்பத்தை சேர்ந்த மாணவர் கீர்த்தி வாசன் தொடர்ந்து நான்காவது முறையாக நீட் தேர்வை எழுதியுள்ளார்.

இந்தச் சந்திப்பில் தோழர்கள் சபரிகிரி, விஷ்ணு, திருப்பூர் சந்தோஷ், பிரசாந்த், ராமகிருஷ்ணன் மற்றும் மகேந்திர குமார் உள்ளிட்ட மாணவர் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# கருஞ்சட்டைப் பதிப்பகத்தின் புதிய வெளியீடுகள்

சீமான், மணியரசன் நடத்தும் அமைப்புகள், தமிழ்த் தேசியம் என்ற போர்வையில் பெரியார் எதிர்ப்பையும் மத அடையாளங்களையும் உயர்த்திப் பிடிப்பதை மறுத்து சென்னையில் தமிழ்த் தேச நடுவம் நடத்திய கருத்தரங்கில் கருத்தாளர்கள் நிகழ்த்திய உரையை கருஞ்சட்டைப் பதிப்பகம் நூலாக வெளியிட்டிருக்கிறது.

- திராவிடம் யாருக்கு சொந்தம்? - பேரா. கருணானந்தன், விலை : ரூ.20/-
- திராவிடத் தமிழ்த் தேசியம் - வாலாஜா வல்லவன், விலை : ரூ.20/-
- பச்சைத் துரோகம் - ஆழி செந்தில்நாதன், விலை : ரூ.10/-
- தமிழ்த் தேசிய அரசியலை சிதைக்கும் பார்ப்பன கங்காணிகள் - பொழிலன், விலை : ரூ.20/-

இது தவிர மேலும் இரு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

- கருவறை நுழைவும் சாதி ஒழிப்பும் - முனைவர் வெ. சிவப்பிரகாசம், விலை : ரூ.130/-
- நீங்கள் எந்தப் பக்கம்? - சுப. வீரபாண்டியன், விலை : ரூ.70/-

கிடைக்குமிடம் :
120, என்.டி.ஆர். தெரு, ரெங்கராஜன்புரம்,
கோடம்பாக்கம், சென்னை-24.

தொடர்புக்கு : 044-24726408 / 044 24726408

## நூல் விற்பனைக்குக் கிடைக்கும்

“திராவிடப் பெரியார்
யாருக்கு எதிரி?”
- விடுதலை இராசேந்திரன்
எழுதிய நூல்
விற்பனைக்குக் கிடைக்கும்.
விலை : ரூ.120/-

தொடர்புக்கு :
தலைமைக் கழகம்,
திராவிடர் விடுதலைக்
கழகம்,
நடேசன் சாலை,
சென்னை.
பேச: 7373684049




Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 05th November 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN